செ.வெ.எண்: 61 / ஜுலை /2020 நாள்: 19.07.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புலம் பெயர்ந்து சொந்த ஊர் திரும்பிய இளைஞர்கள் புதியதொழில் துவங்க தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் கீழ், நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் வரை கடன் உதவி வழங்கப்படுகிறது. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப, அவர்கள் தகவல்.**

தமிழகஅரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரகபுத்தாக்கதிட்டம், ஊரக தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் நிதிசேவைகளுக்கு வழிவகுத்தல் என்றநோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மணப்பாறை, மணிகண்டம், முசிறி, அந்தநல்லூர் மற்றும் துறையூர் ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த 135 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு ஊரகபுத்தாக்கத் திட்டத்தின் மூலம் கொரோனா காலத்தில் ஏற்பட்ட முழு முடக்கத்தினால், ஊராட்சிஅளவிலான கூட்டமைப்பில் உள்ள சுய உதவிக் குழுவினைச் சார்ந்த உறுப்பினர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தினரில் வேலைவிடயமாகவோ அல்லது தொழில் நிமித்தமாக புலம் பெயர்ந்து வேலை இழப்பினால் அல்லது தொழில் இழப்பினால் சொந்த ஊர் திரும்பியதிறன் பெற்ற இளைஞர்கள் புதிதாகத் தொழில் துவங்கிட கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் ரூ. 1 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

இந்த நிதியைப் பெறுவதற்கு புலம் பெயர்ந்து கொரோனா காலத்தில் மீண்டும் திரும்பிய இளைஞர்கள் தொழில் துவங்ககடனுதவி பெற விண்ணப்பிக்கலாம். சொந்த ஊர் திரும்பிய இளைஞர்கள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படும் மணப்பாறை,மணிகண்டம், முசிறி, அந்தநல்லூர் மற்றும் துறையூர் ஆகிய வட்டாரங்களில் உள்ள 135 கிராம ஊராட்சிகளில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

ஆண் விண்ணப்பதாரர் எனில் 18 வயதுமுதல் 35 வயதிற்குள் இருக்க வேண்டும். பெண் விண்ணப்பதாரர் எனில் 18 வயது முதல் 40 வயது வரை இருக்கலாம். மேற்கூறிய தகுதியுடைய நபர்கள் முசிறி, அந்தநல்லூர், மணப்பாறை, மணிகண்டம் மற்றும் துறையூர் வட்டாரங்களுக்குட்பட்ட ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் SGSY பயிற்சி கூடம், வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடம், முசிறி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட அலுவலகத்தை நேரிலும், 04326-261633 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**